எதிர்வரக்கூடிய காலகட்டங்களில் அவர் சார்ந்திருக்கின்ற பகுதியில் மாணாக்கர்களின் சேர்க்கையின் அடிப்படையில், அங்கு பெறப்படுகின்ற விண்ணப்பங்களின் அடிப்படையில், அந்தப் பகுதியில் கலைக் கல்லூரியையோ அல்லது புதிய பாடப் பிரிவுகளையோ தேவைக்கேற்ப ஏற்படுத்தித் தருவதற்கு ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

46—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***20759—திரு. க. அன்பழகன்**:

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், தாராசுரம் பேரூராட்சி, கலைஞர் காலனியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையினை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, தாராசுரம் பேரூராட்சிக்குட்பட்ட கலைஞர் காலனியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு அவ்விடத்தில் ரூ.8,50,000/- மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

2019 பிப்ரவரி 11]

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராசுரம் பேரூராட்சி, கீழத் தெரு, கலைஞர் காலனி மற்றும் அம்பேத்கர் நகர் ஆகிய மூன்று இடங்களில் அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், கீழத் தெரு அங்கன்வாடி மையம் சொந்தக் கட்டடத்திலும், அம்பேத்கர் நகர் அங்கன்வாடி மையம் வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. கலைஞர் காலனி அங்கன்வாடி மையம் சுமார் 103 குழந்தைகளையும், கீழத் தெரு அங்கன்வாடி மையம் சுமார் 146 குழந்தைகளையும், அம்பேத்கர் நகர் அங்கன்வாடி மையம் 85 குழந்தைகளையும் கொண்டு இயங்கி வருகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த 3 மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஒரு கட்டடம் கட்டித் தருவதாக அறிவித்ததற்கு தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள கட்டடங்களையும் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 அங்கன்வாடி மையங்களில் ஓர் அங்கன்வாடி மையம் சொந்தக் கட்டடத்திலும், 2 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்குவதாகக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அங்கன்வாடி மையங்கள் பேரூராட்சிப் பகுதியில் இருப்பதால் பல்வேறு துறைகளிலிருந்து நாம் நிதியைப் பெற வேண்டியிருக்கின்றது. ஊரகப் பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் ரூ.6 இலட்சமும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்மூலம் ரூ.2.5 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அங்கன்வாடி மையங்கள் கட்டப்படுகின்றன. ஆனால், பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படாத நிலையில், அப்பகுதிகளில் அமையவிருக்கின்ற அங்கன்வாடி மையங்களின் கட்டடங்களைக் கட்டுவதற்காக பல்வேறு துறைகளிலிருந்து, நிதி பெற வேண்டியுள்ளது. குறிப்பாக, பேரூராட்சிப் பகுதிகளை*

எடுத்துக்கொண்டால், பேரூராட்சிப் பகுதிகளில் செயல்படுகின்ற அங்கன்வாடி மையங்களுக்கு மத்திய அரசு நிதி உதவியாக 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியிலிருந்து 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், தாராசுரம் பேரூராட்சி பொது நிதியிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் திரட்டி 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. பேரூராட்சிகளில் அங்கன்வாடி மையங்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கான அந்த நிதியுதவியைப் பெறுவதில் சில சிரமங்கள் இருப்பதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், ஊரகப் பகுதிகள் தவிர, Urban பகுதிகளில் அமையவிருக்கின்ற அங்கன்வாடி மையங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு கலந்து பேசி, இதர இரண்டு மையங்களுக்கான கட்டடங்களும் அரசு நிதியுதவி பெற்று கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

முற்பகல் 10-55

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டாவது கேள்வியைக் கேட்பதற்கு முன்னால், வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்ற ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பிப்ரவரி 11 ஆம் தேதி. மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று நேற்றைய தினத்தோடு 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன என்பதை நான் இங்கே பதிய வைத்து, அவர் மறைந்தாலும் நம்மோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்று கூறி, 50 ஆண்டுகள் பணியாற்றிய தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாராசுரம் பேரூராட்சியிலுள்ள கீழத் தெரு அங்கன்வாடி மையம் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவந்தாலும் அது மிகவும் பழமையான கட்டடமாக, பழுதடைந்த நிலையில் உள்ளது. குழந்தைகளுடைய பாதுகாப்பு

2019 பிப்ரவரி 11]

கருதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு பரிந்துரை செய்திருக்கிறேன். அந்தப் பழைய கட்டடத்தை இடிப்பதற்கான பணியை விரைவுபடுத்தவும் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஒப்புதல் கேட்டும், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நிருவாகிகள் ஆய்வு செய்து அதற்கு இன்னும் ஒப்புதல் வழங்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி ஒப்புதல் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எஞ்சியுள்ள அம்பேத்கர் நகரிலுள்ள அங்கன்வாடி மையம் பழுதடைந்த வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கும் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மனதில் தோன்றுகின்ற ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் 2011, 2012 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் உபகரணங்களை சட்டமன்ற உறுப்பினர்கள்மூலம் வழங்கினார்கள். கடந்த 7 ஆண்டுகளாக அது வழங்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய அலுவலகத்தில் மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் உபகரணங்களையும் மீண்டும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்தில் 900 பேர்களுக்கு திருமண நிதியுதவித் திட்ட உதவி கிடைக்கப்பெறவில்லை. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா*: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தில் அவருடைய தொகுதியில் 900 பேருக்கு நிதியுதவி வழங்கப்படவில்லை என்று கூறினார்கள். அதுகுறித்து உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தி; அது வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரூராட்சிப் பகுதியில் இருக்கின்ற இரண்டு அங்கன்வாடி மையங்களுக்கு கட்டடங்களை உடனடியாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த*

நிதியாண்டே அந்த இரண்டு கட்டடங்களையும் கட்டுவதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற உபகரணங்கள், பெட்ரோல் ஸ்கூட்டர்கள் போன்றவற்றை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையிலேயே கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு நலத் திட்டங்களுக்கான விழாக்கள் மாவட்ட அளவில் நடைபெறும்போது மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டங்களில் நடக்கின்ற அரசு விழாக்களில் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு பலன்களைப் பெற்றுத் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

நவீன அரிசி ஆலை

***35045—திரு. வி. பன்னீர்செல்வம்**:

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதிக்கு அருகே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் இயங்கிவரும் போளூர் அதிநவீன அரிசி